DEPOSITION OF WITNESS

**In the Court of III Additional District and Sessions Judge, Tiruchirappalli.**

**Session Case No. 227/2021**
**Present – B.Saravanan, B.Sc.B.L,**
**III Additional District and Sessions Judge, Tiruchirappalli.**

Prosecution witness

(Chapter XXIII Code of Criminal Procedure)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | ஆசியா | Caste | : | |
| Husband Name | : | ரகுமான் சேட்டு | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of **08.08.2025.**

**PW - 10**

**(**எதிரி ஆஜர்**)**

**முதல் விசாரணை**

நான் தற்சமயம் திருவெறும்பூர் மதுவிலக்கு பிரிவில் பெண் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 17.10.2020 அன்று துவரங்குறிச்சி காவல்நிலையத்தில் முதல்நிலை காவலராக பணியிலிருந்தபோது துவரங்குறிச்சி காவல்நிலைய குற்ற எண்.48/2020 இதச பிரிவு 307 @ 302 வழக்கில் இறந்துபோன பழனிச்சாமி என்பவரது பிரேதத்தை பிரேத பரிசோதனை அலுவலுக்கு நியமிக்கப்பட்டு காவல் ஆய்வாளர் பிரேத விசாரணைக்கு பின் பிரேத பரிசோதனை செய்ய கோரிய வேண்டுகோள் கடிதத்தைப் பெற்று திருச்சி அரசு மருத்துவமனை மருத்துவரிடம் ஒப்படைத்து பிரேதத்தை அடையாளம் காண்பித்து பிரேத பரிசோதனை முடிந்து பிரேதத்தை உறவினர்களிடம் ஒப்படைத்தேன். பிரேத பரிசோதனையின்போது உடல் உள்ளுறுப்புகளை சேகரித்து என்னிடம் கொடுத்ததை நான் திருச்சி வட்டார தடய அறிவியல்

ஆய்வகத்தில் ஒப்படைத்து நிலையம் வந்து அறிக்கை செய்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

அன்றைய தினம் நான் மருத்துவரிடம் முகமது அன்சாரியின் பிரேதத்தை அடையாளம் காட்டினேன் என்றும், பழனிச்சாமி என்பவரது பிரேத்தை அடையாளம் காட்டவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை** – இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.